**தலைப்பு 248 - இலங்கை மது வரித் திணைக்களம்**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இலங்கை மது வரித் திணைக்களத்தின் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று என்பவற்றை உள்ளடக்கிய 2018 திசெம்பர் 31 ஆந்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்திலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(1) ஆம் பிரிவின் பிரகாரம் இலங்கை மது வரி திணைக்களத்தின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் உள்ளடங்கிய பொழிப்பறிக்கை 2019 மே 31 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 11(2) ஆம் பிரிவின் பிரகாரம் திணைக்களத்திற்குரிய வருடாந்த விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2019 மே 30 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படும்.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தை தவிர்த்து நிதிக்கூற்றுக்கள் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறு இலங்கை மது வரி திணைக்களத்தின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று என்பன பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பு

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு அமைவாகவும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 38 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கு இணங்கவும் உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல், மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இன்றி நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் பிரிவின் பிரகாரம் இலங்கை மது வரி திணைக்களத்தின் வருடாந்த மற்றும் உரிய நேரத்தில் நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்க கூடிய வகையில் தனது வருமானங்கள், செலவினங்கள்,

சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரிய வகையில் ஏடுகள் மற்றும் அறிக்கைகளை பேணுதல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் அரசின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்று தயாரித்து பேணப்படுகின்றது என்பதனை கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்த வேண்டியதுடன் அம்முறைமையின் செயற்திறன் தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வு செய்யப்பட்டு அதன் பிரகாரம் முறைமையை செயற்திறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் செய்யப்படல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைவழங்குவது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பொழிப்பு அறிக்கையை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றது என்பதற்கான உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

தொழில்சார் தீர்ப்புக்கள் மற்றும் தொழில்சார்ஐயப்பாடுகளுடன் இலங்கை கணக்காய்வு நிமங்களின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. என்னால்

- மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தினை இனங்காணும் போதும் மதிப்பீடு செய்யும் போதும் சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு மாவட்ட திணைக்களத்தின் உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமானதன்மை தொடர்பாக அபிப்பராயமொன்றை தெரிவிப்பதற்கு கருதவில்லை.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கு அடிப்படையாகக் கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளது என்பதனை மதிப்பீடு செய்தல்.

- ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பிக்கும் போதும் நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கு அடிப்படையாகக் கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளதாகவும்

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

## 1.5 ஏனைய சட்டத்தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(ஈ) பிரிவின் பிரகாரம் பின்வரும் விடயங்களை நான் தெரிவித்துக்கொள்கின்றேன்.

(அ) முன்னைய ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கும் தேவைப்பாடு இல்லாதிருந்தமைால் மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் இணங்குவதாக கூறுவதற்கு முடியாதுள்ளது

(ஆ) இலங்கை மது வரித் திணைக்களத்தினால் முன்னைய ஆண்டிற்குரிய நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கும் தேவைப்பாடு இல்லாதிருந்தமையால் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான பரிந்துரைகள் சமர்ப்பிக்கப்படவில்லை.

## 1.6 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 1.6.1 நிதி கூற்றுக்கள் சுற்றறிக்கையிலுள்ள ஏற்பாடுகளுடன் இணங்கியிருக்காமை

2018 நவம்பர் 21 ஆந் திகதிய 267/2018 ஆம் இலக்க அரசாங்க கணக்குகள் சுற்றறிக்கையின் பிரகாரம் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட வேண்டிய போதிலும் அத்தேவைப்பாடுகளுக்கு முரணான சந்தர்ப்பங்கள் கீழே தரப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | சிபார்சு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | 2018 நவம்பர் 21 ஆந் திகதிய 267/2018 ஆம் இலக்க அரசாங்க கணக்குகள் சுற்றறிக்கையின் 7(iv) ஆம் பந்தியின் பிரகாரம் நிதி நிலைமை கூற்றில் ஆதனம், பொறி, உபகரணங்கள் என்பனவாகக் காட்டப்பட்டிருந்த ரூபா 982,032,375 மீதிக்குச் சமனான ஒரு மீதி தேறிய சொத்துக்கள் / மூலதனத்தின் கீழும் ஒதுக்க பெறுமதியாகக் காட்டப்பட வேண்டிய போதிலும் அதற்கிணங்க காட்டப்பட்டிருக்கவில்லை. | 2018 நவம்பர் 21 ஆந் திகதிய 267/2018 ஆம் இலக்க அரசாங்க கணக்குகள் சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | சுட்டிக்காட்டப்பட்டவை சரியாகும் 2019 ஆம் ஆண்டில் நிதிச் செயலாற்றல் கூற்றைத் தயாரிக்கும் போது ஆதனம், பொறி, உபகரணங்களாக ரூபா 982,032,375 இற்குச் சமனான பெறுமதியை ஒதுக்கமாக பதிவு செய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். |
| (ஆ) | 267/2018 ஆம் இலக்க அரசாங்க கணக்குகள் சுற்றறிக்கையின் பிரகாரம் நிதி செயலாற்றல் கூற்றைத் தயாரிக்கும் போது 2018 ஆம் ஆண்டிற்கான பாதீடு செய்யப்பட்ட தரவுகளும் உள்ளடக்கப்பட வேண்டிய | 2018 நவம்பர் 21 ஆந் திகதிய 267/2018 ஆம் இலக்க அரசாங்க கணக்குகள் சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளின் | சுட்டிக்காட்டப்பட்டவை சரியாகும். தவறுதலாக அத்தரவை உள்ளடக்க முடியாதிருந்ததுடன் 2019 ஆம் ஆண்டிற்கான நிதி செயலாற்றல் கூற்றை தயாரிக்கும் போது அத்தரவை உள்ளடக்கச் |

| | | |
|---|---|---|
| போதிலும் அவ்வாறு நடவடிக்கை எடுக்கப்படாத சந்தர்ப்பங்கள் காணப்பட்டன. | பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | செய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். |

**1.6.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்**

**(அ) நிதி செயலாற்றல் கூற்று**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | சிபார்சு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (i) | மாதாந்த பொழிப்பின் பிரகாரம் ஏனைய பெறுவனவுகள் ரூபா 86,939,143 ஆக இருந்ததுடன் நிதி செயலாற்றல் கூற்றைத் தயாரிக்கும் போது திறைசேரி குறிப்புக்களுடன் ஒப்பீடு செய்யப்படாது அது ரூபா 243,586,169 ஆகக் காட்டப்பட்டிருந்தது. | மாதாந்த பொழிப்பு தொடர்பாகக் கவனம் செலுத்தப்படுவதற்கும் வருமானப் பெறுவனவுகளை பகுப்பாய்வு அறிக்கைகளுடன் ஒப்பீடு செய்வதற்கும் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | அவதானிப்பு சரியானது நிதி செயலாற்றல் கூற்றை தயாரிக்கும் போது ஏனைய வருமானங்களாகக் திறைசேரி வைப்புக்கணக்கிலும் பெறுவனவுகள் உள்ளடக்கப்பட்டுள்ளன. ஆனால் சரியான பெறுவனவுகள் ரூபா 86,939,143 எனக் குறிப்பிடுகிறேன். |
| (ii) | சமர்ப்பிக்கப்பட்ட நிதி செயலாற்றல் கூற்றின் பிரகாரம் கலால் வரி பரிசு நிதியத்திற்குப் பெற்றுக்கொள்ளப்பட்ட ரூபா 183,372,534 மொத்த தொகையான பணம் ஏனைய பெறுவனவுகளாக அறிவிக்கப்பட்டிருந்தது. எனினும், அக்கணக்குகளுக்குரிய வைப்புக்களின் மொத்த தொகையான ரூபா 465,068,138 பணம் நிதி நிலைமைக் கூற்றில் காட்டப்பட்டிருக்கவில்லை. | அரசாங்க கணக்குகள் சுற்றறிக்கையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | அவதானிப்புக்கள் சரியானவை எதிர்காலத்தில் சரியான மீதிக்கு இணங்க தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுப்பேன். |
| (iii) | திணைக்களத்தின் மாதாந்த கணக்கு பொழிப்புக்களுக்கு இணங்கவும் வரவு அறிவித்தல்களின் பிரகாரமும் திறைசேரிக்கு மேற்கொண்ட மொத்த பணம் அனுப்புதல்கள் ரூபா 113,741,682,208 ஆக இருந்ததுடன் ஒப்பீடு செய்யப்படாது நிதி | திறைசேரிக்கு மேற்கொண்ட மொத்த பணம் அனுப்புதல்களை சரியாக கணித்தல் வேண்டும். | சுட்டிக்காட்டப்பட்டவை சரியாகும் மொத்த பணம் அனுப்புதல்கள் ரூபா 113,657,748,686 ஆக இருக்க வேண்டுமென சுட்டிக்காட்டுகிறேன். |

| | | | |
|---|---|---|---|
| | செயலாற்றல் கூற்றில் அது ரூபா 113,590,225,124 ஆகக் காட்டப்பட்டிருந்தது. | | |
| (iv) | மாதாந்தப் பொழிப்பின் பிரகாரம் ரூபா 86,939,142 தொகையான ஏனைய வருமானம் நிதி செயலாற்றல் கூற்றில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை | சரியாகக் கணிக்கப்படுதல் வேண்டும். | அவதானிப்புக்கள் சரியானவை. நிதி செயலாற்றல் கூற்றை தயாரிக்கும் போது இம் மீதியை தவறுதலாக கணக்கீடு செய்ய முடியாதிருந்ததுடன் 2019 ஆம் ஆண்டிற்கான கணக்குகளின் மூலம் அதனை சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். |

**(ஆ) நிதி நிலைமைக் கூற்று**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | சிபார்சு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (i) | திணைக்களத்தின் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான தீர்த்து வைக்கப்படாத கட்டிட வாடகை முற்பண மீதி ரூபா 3,355,000 ஆக இருந்தும் அப்பெறுமதி நிதி நிலைமைக் கூற்றில் செய்த வேலைகள் மற்றும் முற்பண ஒதுக்கங்களாக காட்டப்பட்டிருக்கவில்லை. அவ்வாறே இது நிதிக் கூற்றுக்களுடனான ACA–5(பீ) குறிப்புக்களிலும் தவிர்க்கப்பட்டிருந்தது. | 2018 நவம்பர் 21 ஆந் திகதிய 267/2018 ஆம் இலக்க அரசாங்க கணக்குகள் சுற்றறிக்கையின் பிரகாரம் வருடாந்த நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்படுதல் வேண்டும். | தெரிவிக்கப்பட்டமை சரியாகும். தவறுதலாக ACA–5(பீ) குறிப்புக்களுக்கு உள்ளடக்குவதற்கு முடியாதிருந்தது என தெரிவித்துக் கொள்வதுடன் 2019 ஆம் ஆண்டின் போது அந்த தீர்க்கப்படாத மீதியை தீர்த்து வைப்பதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. |
| (ii) | மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்களின் மீதி நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் ரூபா 982,032,375 ஆக இருந்த போதிலும் கணக்காய்விற்குச் சமர்ப்பித்த தகவல்களின் பிரகாரம் அது ரூபா 1,659,059,552 ஆக | நிலையான சொத்துக்கள் பதிவேடு துணைப் பதிவேடுகள் என்பன நாளது வரையாக்கப்படுதல் வேண்டும். | அவதானிப்பு சரியானதாகும். ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்களின் பெறுமதி ரூபா 1,659,059,552 ஆகும். அந்த சரியான பெறுமதிக்கு இணங்க 2019 ஆம் ஆண்டிற்கான நிதி செயலாற்றல் |

| | | |
|---|---|---|
| இருந்ததனால் ரூபா 677,027,177 தொகையான வேறுபாடு அவதானிக்கப்பட்டது. | | கூற்றை தயாரிக்கும் போது கவனத்திற்கு எடுத்துக்கொள்வதற்கு குறித்துக்கொள்கிறேன். |

**1.6.3 அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணங்கள் கணக்கு தொடர்பான இணக்கக்கூற்று**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | சிபார்சு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (i) | தனித்தனி மீதிகளின் வகைப்படுத்தலில் இனங்காணப்படாத மீதிகளாக ரூபா 2,579,716 தொகை உள்ளடக்கப்பட்டிருந்தது. | இனங்காணப்படாத மீதியை மாதாந்த பொழிப்புக்களுடன் ஒப்பீடு செய்யப்பட்டு இனங்காண்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | இனங்கண்டு ஏடுகளில் உள்ளடக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. |
| (ii) | 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறு வேலைகளிலிருந்து இடை நிறுத்தி வைக்கப்பட்ட 9 உத்தியோகத்தர்களிடமிருந்து ரூபா 783,684 பணம் அறவீடு செய்ய வேண்டியிருந்தது. அவற்றில் 5 ஆண்டுகளை மிகைத்த 2 ஊழியர்களிடமிருந்து அறவிட வேண்டிய ரூபா 140,202 தொகையும் 3 ஆண்டுகளை மிகைத்த 3 ஊழியர்களிடமிருந்து அறவிட வேண்டிய ரூபா 335,827தொகையுமாக இருந்ததுடன் இப் பணத்தை அறவீடு செய்வதற்காக நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | தாபன விதிக் கோவையின் XLVII ஆம் அத்தியாயத்தின் 8.1 மற்றும் 8.2 ஆம் பிரிவுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல். | எதிர்காலத்தில் அறவீடு செய்வதற்கு தேவையான நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. என்பதனை தயவாக தெரிவித்துக் கொள்கிறேன் |
| (iii) | திணைக்களத்தின் சேவையை விட்டுச் சென்ற சேவையிலிருந்து நீக்கப்பட்ட மற்றும் இராஜினாமாச் செய்த ஊழியர்களிடமிருந்து 2018 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு அறவிட வேண்டிய ரூபா ரூபா 591,273 கடன் மீதிகள் 6 ஆண்டுகளிலிருந்து 10 ஆண்டுகள் வரையான | தாபன விதிக் கோவையின் XLVII ஆம் அத்தியாயத்தின் 8.1 மற்றும் 8.2 ஆம் பந்திகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல். | எதிர்காலத்தில் அறவீடு செய்வதற்கு தேவையான நடவடிக்கை எடுக்கப்படும் என்பதனை தயவாக தெரிவித்துக் கொள்கிறேன் |

பழைய மீதிகளாகும். அக் கடன் மீதிகளைத் தீர்த்து வைப்பதற்கு திணைக்களத்தால் போதியளவு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 1.6.4 வைப்புக்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | சிபார்சு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (i) | திறைசேரியின் அச்சு வெளியீட்டின் பிரகாரம் வைப்புக்கள், பெறுவனவுகள் மற்றும் கொடுப்பனவுகளின் பெறுமதி முறையே ரூபா 226,519,053 மற்றும் ரூபா 185,331,126 ஆக இருந்தும் நிதி செயலாற்றல் கூற்றில் அது முறையே ரூபா 43,146,519 மற்றும் ரூபா 34,337,939 ஆகக் காட்டப்பட்டிருந்தது. | திறைசேரி அச்சு வெளியீடுகளின் பிரகாரம் ஒப்பீடு செய்து சரியான தரவுகளை உள்ளடக்குவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | அவதானிப்புக்கள் சரியானவை நிதிச் செயலாற்றலை ஒப்பீடு செய்யும் போது வைப்புக் கணக்கினதும் மது வரியினதும் பரிச வைப்புக் கணக்கினதும் பெறுவனவு மற்றும் கொடுப்பனவு மீதிகளை கவனத்திற்கு எடுத்துக்கொள்ளப்படவில்லை. 2019 ஆம் ஆண்டிற்கான நிதி செயலாற்றல் கூற்றை தயாரிக்கும் போது உள்ளடக்குவதற்கு குறித்துக்கொள்கிறேன். |
| (ii) | நிதி நிலைமைக் கூற்றின் பிரகாரம் வைப்புக் கணக்கின் மீதி ரூபா 112,995,422 ஆக இருந்ததுடன் திறைசேரி அச்சு வெளியீட்டின் பிரகாரம் ரூபா 578,063,562 ஆகும். | திறைசேரி அச்சு வெளியீடுகளுடன் ஒப்பிட்டு சரியான மீதியை பதிவு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | சுட்டிக்காட்டப்பட்டவை சரியாகும். வைப்புக் கணக்கின் மீதியை 2019 ஆம் ஆண்டின் இறுதி கணக்குகளின் மூலம் சரி செய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். |

### 1.6.5 கட்டு நிதி மீதிகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சிபார்சு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| திறைசேரி அச்சுக் குறிப்புக்களின் பிரகாரம் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான கட்டு நிதி மீதி ரூபா 117,023,968 ஆக இருந்தும் காசுப் பாய்ச்சல் கூற்றில் மற்றும் நிதி நிலைமைக் கூற்றில் அது ரூபா 33,090,446 | திறைசேரி அச்சுக் குறிப்புக்களுடன் ஒப்பிட்டு சரியாக காட்டுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | சுட்டிக்காட்டியவை சரியாகும் திசெம்பர் 31 இல் உள்ளவாறான திறைசேரி கட்டுநிதி மீதி ரூபா 117,023,968 ஆகக் காட்டப்பட்டிருந்தும் திசெம்பர் 31 இல் உள்ளவாறு காசேட்டை பூச்சியமாக்குவதற்காக ரூபா 83,053,521.91 மற்றும் ரூபா 880,000 தொகைகள் வரவு கட்டளையின் |

| | | |
|---|---|---|
| ஆகக் காட்டப்பட்டிருந்தது. | | (பிரதி இணைக்கப்பட்டுள்ளது.) மூலம் மீண்டும் பொதுத்திறைசேரிக்கு வழங்கியதன் காரணமாக நிதிக் கூற்றில் காட்டப்பட்டுள்ள ரூபா 33,090,446 பணம் சரியானது என குறிப்பிடுகிறேன். |

**1.6.6 பதிவேடுகள் மற்றும் புத்தகங்கள் பேணப்படாமை**

இலங்கை மதுவரி திணைக்களத்தால் கீழே தரப்பட்டுள்ள சில ஏடுகள் பேணப்படாதிருந்ததுடன் சில ஏடுகள் முறைப்படியாகவும் நாளதுவரையாகவும் பேணப்பட்டிருக்கவில்லை. தெரிவுக் கணக்காய்வு பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்டது.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சிபார்சுகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (i) நிலையான சொத்துக்கள் பதிவேடு | | |
| 1978 திசெம்பர் 17 ஆந் திகதிய 842 ஆம் இலக்க திறைசேரி சுற்றறிக்கை / நிதிப்பிரமாணம் 502 (2) இன் பிரகாரம் அதன் II ஆவது பின்னிணைப்பிற்கு இணங்க நிலையான சொத்துக்கள் பதிவேடு நாளது வரையாக்கப்பட்டிருக்கவில்லை. | 1978 திசெம்பர் 17 ஆந் திகதிய 842ஆம் இலக்க திறைசேரி சுற்றறிக்கை / நிதிப்பிரமாணம் 502(2) இன் பிரகாரம் அதன் II ஆவது பின்னிணைப்பிற்கு இணங்க நிலையான சொத்துக்கள் பதிவேடு உரிய முறையில் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் இணக்கப்பாட்டுடன் பேணப்படுதல் வேண்டும். | தற்பொழுது நிலைான சொத்துக்கள் பதிவேடு நாளது வரையாக்கப்பட்டுள்ளது. |
| (ii) கணனிகள், துணைக்கருவிகள், மென்பொருட்கள் என்பன தொடர்பான நிலையான சொத்துக்கள் பதிவேடு | | |
| 2002 நவம்பர் 28 ஆந் திகதிய ஐஏஐ/2002/02 ஆம் இலக்க திறைசேரி சுற்றறிக்கையின் பிரகாரம் கணனிகள், துணைக்கருவிகள் மற்றும் மென்பொருட்கள் தொடர்பான நிலையான சொத்துக்கள் பதிவேடு பேணப்பட்டிருக்கவில்லை. | 2002 நவம்பர் 28 ஆந் திகதிய ஐஏஐ/2002/02 ஆம் இலக்க திறைசேரி சுற்றறிக்கையின் பிரகாரம் கணனிகள் துணைக் கருவிகள் மற்றும் மென்பொருட்கள் தொடர்பான | இது சம்பந்தமாக எதிர்காலத்தில் நடவடிக்கை எடுப்பதற்கு எதிர்பார்த்துள்ளேன் |

சொத்துக்கள் பதிவேடு பேணப்படுதல் வேண்டும்.

### 1.6.7 கணக்காய்விற்கான சான்றுகளின்மை

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சிபார்சு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| திணைக்களத்திற்கு மீளாய்வாண்டின் போது சமர்ப்பிக்கப்பட்ட 08 கணக்காய்வு ஐய வினாக்களுக்கு 2019 மே 27 ஆந் திகதி வரை பதில்கள் சமர்ப்பிக்கப்பட்டிருக்காததுடன் அந்த ஐய வினாக்கள் தொடர்பான கணிப்பிடக்கூடிய கொடுக்கல் வாங்கல்களின் பெறுமதி ரூபா 3,097 மில்லியனாகும். | கணக்காய்வு ஐய வினாக்களுக்கு தாமதிக்காது பதில்கள் வழங்குவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | எதிர்காலத்தில் உரிய திகதிக்கு பதிலை வழங்குவதற்கு நடவடிக்கை எடுப்பேன். |

### 1.6.8 பிரதான கணக்கீட்டுஉத்தியோகத்தர் / கணக்கீட்டு உத்தியோகத்தரால் மேற்கொள்ளப்பட வேண்டிய சான்றுறுதிப்படுத்தல்கள்

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38 ஆம் பிரிவிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் கணக்கீட்டு உத்தியோகத்தரால் பின்வரும் விடயங்கள் சம்பந்தமாக சான்றுபடுத்த வேண்டியிருந்தும் அதற்கிணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சிபார்சு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| திணைக்களம் நிதிக் கட்டுப்பாட்டிற்காக வினைத்திறனான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையை தயாரித்து பேணி வருகின்றது என்பதனை பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரும் கணக்கீட்டு உத்தியோகத்தரும் சான்றுப்படுத்த வேண்டியுள்ளதுடன் அம்முறைமையின் வினைத்திறன் தொடர்பாக காலத்துக்கு காலம் மீளாய்வு செய்து அதற்கிணங்க முறைமையினை வினைத்திறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் செய்யப்பட வேண்டுமெனவும் அம்மீளாய்வினை எழுத்து மூலம் மேற்கொண்டு அதன் பிரதியை கணக்காய்வாரள் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்க வேண்டியிருந்தது. எனினும், | 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 38 ஆம் பிரிவிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | வினைத்திறனாக உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையைத் தயாரிப்பதற்கும் அது தொடர்பான மீளாய்வினை மேற்கொள்வதற்கும் தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. |

அவ்வாறான மீளாய்வு மேற்கொள்ளப்பட்டமை பற்றி கூற்றுக்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படவில்லை.

**1.6.9 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுடனான இணக்கமின்மைகள்**

தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றிலுள்ள ஏற்பாடுகளுடனான இணக்கமின்மைச் சந்தர்ப்பங்கள் கீழே பகுப்பாய்வு செய்து தரப்பட்டுள்ளன.

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுக்கான தொடர்பு | | பெறுமதி | இணங்காமைகள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
|---|---|---|---|---|---|
| | | ரூபா | | | |
| (அ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணக் கோவை | | | | |
| | நிதிப்பிரமாணம் 396 | 61,810 | வழங்கப்பட்டு 6 மாதங்களை மிகைத்த ரூபா 61,810 மொத்த தொகையான 10 காசோலைகள் சம்பந்தமாக நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை. | நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். | சுட்டிக் காட்டப்பட்டவை சரியாகும். 6 மாதங்களை மிகைத்த காசோலைகளை அரசாங்கத்தின் வருமானத்திற்கு செலவு வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப் பட்டுள்ளது. |
| (ஆ) | 2008ஏப்ரல் 10 ஆந் திகதிய 1544/17 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தலில் உள்ளடக்கப்பட்ட 902 ஆம் இலக்க கலால் வரி அறிவித்தலின் iii ஆம் பட்டோலையின் 11 ஆம் பந்தி | - | ஏற்பாடுகளுக்கு முரணாக 04 மாகாணங்களுக்கு நிர்ணயிக்கப்பட்ட எல்லைகளை மிகைத்து 07ர.பீ உத்தரவுப் பத்திரங்கள் வழங்கப்பட்டிருந்தன. | வர்த்தமானி அறிவித்தலுக்கு இணங்க நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | இந்த 07 உத்தரவுப் பத்திரங்கள் தொடர்பாக எதிர்காலத்தில் அறிவிப்பேன். |

**1.6.10 முறையற்ற கொடுக்கல் வாங்கல்கள்**

-----------------------------------------------------------------

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | சிபார்சு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | 2018 ஆம் ஆண்டின் போது திரையரங்குகளுக்காக 38 பொழுதுபோக்கு உத்தரவுப் பத்திரங்களைப் (ர.பி.9) புதுப்பிப்பதற்காக அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்தும் அந்த உத்தரவுப் பத்திரங்களின் நிலையம் சம்பந்தமான தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன. | | |
| (i) | சுற்றாடல் சம்பந்தமாக அடைந்து கொள்ள வேண்டிய தூரத்தின் அளவு 18 சந்தர்ப்பங்களில் அடைந்து கொள்ளப்பட்டிருக்கவில்லை. | மதுவரி அறிவித்தலின் பிரகாரம் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க உத்தரவுப் பத்திரங்களை வழங்குதல் வேண்டும். | சுற்றாடல் சம்பந்தமாக அடைந்து கொள்ள வேண்டிய தேவைப்பாட்டினை திரைப்படக் கூட்டுத்தாபனத்தின் ஒழுங்குபடுத்தலின் அடிப்படையில் இடம்பெறுதல் எதிர்பார்க்கப்பட்டதுடன் அதற்காக தேவையான ஆலோசனைகளும் தெளிவுபடுத்தல்களும் திணைக்களத்தினால் மேற்கொள்ளப்படும் காணப்படுகின்ற குறைபாடுகள் திரைபடக் கூட்டுத்தாபனத்துடன் கலந்துரையாடி விரைவாகப் பூர்த்தி செய்வதற்கு தேவையான ஆலோசனைகள் தற்பொழுது வழங்கப்பட்டுள்ளது. |
| (ii) | திரையரங்குகளில் காட்சிகளைப் பார்ப்பவர்களைத் தவிர்த்து ஏனைய | மதுவரி அறிவித்தல்களின் பிரகாரம் உரிய சட்ட விதிகளுக்கு | உத்தரவுப் பத்திர நிபந்தனைகளை மீறுதல் இடம்பெறுகின்ற வேளையில் மதுவரி |

| | | | |
|---|---|---|---|
| | வெளித்தரப்பினர்களுக்கு 7 சந்தர்ப்பங்களின் போது மதுபானங்கள் விற்பனை செய்தல். | இணங்க உத்தரவுப் பத்திரங்களை வழங்க வேண்டியுள்ளதுடன் அவற்றினை மீறுபவர்களுக்கு தேவையான நடவடிக்கைகள் எடுத்தல் வேண்டும். | கட்டளைச்சட்டத்தின் 48 ஆம் பிரிவிற்கு இணங்க தொழில்நுட்ப குற்ற அறிக்கை சமர்ப்பிக்கப்படும். இப்பிழைகளை மதுவரி கட்டளைச் சட்டத்தின் 56 ஆம் பிரிவின் பிரகாரம் இணக்கம் செய்யும் இயலுமை உள்ளதுடன் அதற்கிணங்க இணக்கம் செய்யும் கட்டணமும் தண்டப்பணமும் அறவீடு செய்யப்படும் இணக்க கட்டணம் செலுத்தப்பட வில்லையாயின் உத்தரவுப் பத்திரத்தை தடுத்து வைக்கலாம். |
| (iii) | திரையரங்குகளில் காட்சிகள் காட்சிப்படுத்தாத சந்தர்ப்பங்களிலும் கூட உத்தரவுப் பத்திரங்களின் நிபந்தனைகளை மீறி மதுபான விற்பனை இடம்பெற்றிருந்த 7 சந்தர்ப்பங்கள் தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்டன. உத்தரவுப் பத்திரங்களை வழங்கும் போது அது தொடர்பாக ஆராய்ந்து பார்க்காது உத்தரவுப் பத்திரங்கள் வழங்கப்பட்டிருந்தன. | உத்தரவுப் பத்திரத்தில் குறிப்பிட்ட நிபந்தனைகளை மீறுதல் தொடர்பாக பரீட்சிக்கப்பட வேண்டியதுடன் அவற்றினை மீறுபவர்களுக்கு தேவையான நடவடிக்கைகள் எடுத்தல் வேண்டும். | இந்த உத்தரவுப் பத்திரங்கள் சம்பந்தமாக விசேடமாகப் பரீட்சித்து வெளிப்படுத்தப்பட்டுள்ள உத்தரவுப் பத்திர நிலையங்கள் தொடர்பான பிழைகள் சம்பந்தமாக உத்தரவுப் பத்திரதாரர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கைகள் எடுப்பதற்கும் அந்த நிலைமையை சரி செய்வதற்கும் தேவையான ஆலோசனைகள் வழங்கப்பட்டுள்ளன. |
| (iv) | மதுவரி உத்தியோகத்தர்களால் உத்தரவுப் பத்திரங்களை பெற்றுள்ள தரப்பினர்களின் நிலையம் தொடர்பான பரிசீலனைகள் முறைப்படியாக இடம்பெறுகின்றது என்பது பற்றிய உறுதிப்படுத்தல்கள் இல்லாமை. | உத்தரவுப் பத்திரதாரர்களின் தொழில் முயற்சி நிலையத்தை பரிசீலனைக்கு உட்படுத்துதல் வேண்டும். | பதில்கள் வழங்கப்பட்டிருக்க வில்லை. |

### 1.6.11 சச்சரவுத்தன்மையான கொடுக்கல் வாங்கல்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சிபார்சு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (அ) மதுவரி கட்டளைச் சட்டத்தின் 666 ஆம் மதுவரி அறிவித்தலின் உத்தரவுப் பத்திர நிபந்தனை இலக்கம் 12 இன் பிரகாரம் உத்தரவுப் பத்திரத்தை மற்றுமொரு நபருக்கு ஒப்படைக்கலாகாது எனவும் உத்தரவுப் பத்திர முகாமையாளரின் நியமனத்தை மதுவரி ஆணையாளரிடமிருந்து உரிய வேளையில் பெற்றுக் கொண்ட அனுமதியின்றி ஏனைய தரப்பினருக்கு ஒப்படைத்தல், குத்தகைக்கு வழங்குதல் அல்லது நிருவகிப்பதற்காக யாராவது முகவரை நியமிக்கலாகாது எனவும், காட்டப்பட்டிருந்தது. எனினும், மதுவரி ஆணையாளரின் அங்கீகாரமின்றி ஸ்டோர்ஸ் நிறுவனத்தினால் 2018 செப்தெம்பர் 03 ஆந் திகதிய இலக்கமற்ற கடிதத்தின் மூலம் மாதாந்தம் ரூபா 60,000 முகாமைத்துவக் கட்டணம் அறவிடுதவின் அடிப்படையில் ஏனைய ஒரு நிறுவனத்திற்கு அந்த உத்தரவுப் பத்திரத்தில் வியாபார நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு வழங்கப்பட்டுள்ளது என்பது அவதானிக்கப்பட்டது. | மதுவரி அறிவித்தல்களில் குறிப்பிடப்பட்ட நிபந்தனைகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தலும் அவ்வாறு செய்யாத சந்தர்ப்பங்களில் முறையான நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | பதில்கள் வழங்கப்பட்டிருக்க வில்லை. |
| (ஆ) 2014 ஏப்ரல் 30 ஆந் திகதிய கஆநா/பொது/06/14 ஆம் இலக்க கடிதத்தின் பிரகாரம் மூன்று மாதங்களுக்கு ஒரு தடைவ கள்ளு உற்பத்தியாளர்களிடமிருந்து பெற்றுக் கொள்ளப்படுகின்ற கள்ளு மாதிரியை அரசாங்க இரசாயனப் பகுப்பாய்வாளருக்கு அனுப்பி வைக்கப்படுதல் வேண்டும். அவ்வாறே திணைக்களத்தின் கட்டளைத் தொகுப்பின் iv ஆம் | திணைக்களத்தின் கட்டளையின் பிரகாரம் தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுதல் வேண்டும். | கள்ளு மாதிரிகளைப் பெற்றுக் கொள்ளல் முறைப்படியாக இல்லை என்பதனை ஏற்றுக் கொள்கின்றேன். அதனை சரி செய்வதற்கு தேவையான ஆலோசனைகள் வழங்கப்பட்டுள்ளன. |

அத்தியாயத்தின் 12.2 ஆம் பந்தியின் பிரகாரம் கள்ளு போத்தல் உற்பத்திக்குப் பொறுப்பாகச் செயற்படுகின்ற மதுவரி உத்தியோகத்தர்கள் உற்பத்தி செய்யப்படுகின்ற ஒவ்வொரு தடவையிலும் உற்பத்திச் செயற்பாடுகள் முடிவடைந்ததன் பின்னர் போத்தலில் அடைக்கப்பட்ட கள்ளு போத்தல்களிலிருந்து மாதிரிகளைப் பெற்று அந்த மாதிரியை அரசாங்க இரசாயனப் பகுப்பாய்வாளருக்கு அனுப்பி வைக்கப்படுதல் வேண்டும். எனினும், மாதம்மை மதுவரி அதிகாரப் பிரதேசத்திலுள்ள 6 உற்பத்தி நிலையங்களில் மாதிரிகள் பெற்றுக் கொள்வது சம்பந்தமாக மேற்கொள்ளப்பட்ட பரிசோதனையின் போது 2014, 2015, 2016 ஆம் ஆண்டுகளின் போது ஒரு ஆண்டிற்கு ஒரு தடவை வீதமும் 2017 ஆம் ஆண்டின் போது 2 தடவைகளிலிருந்து 3 தடவைகள் வரையான சந்தர்ப்பங்களின் போதும் மாத்திரம் மாதிரிகள் எடுக்கப்பட்டிருந்தன. 2018 ஆம் ஆண்டிற்காக 2018 யூலை 24 ஆந் திகதி வரை ஒரு தடவையேனும் மாதிரியைப் பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) தனியார் கள்ளு வழங்குனருக்கு தும்மலசூரிய எக்மி வடிசாலைக்கு கள்ளு வழங்குவதற்காக மிரிஸ்லந்த ஹேனவத்த காணியின் 2,847 தென்னை மரங்கள் மற்றும் எகொடவத்த காணியின் 1,500 தென்னை மரங்களிலிருந்து கள்ளு வடிப்பதற்காக அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்தது. இது சம்பந்தமாக பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(i) 2018 யூலை 26 ஆந் திகதி மேற்கொள்ளப்பட்ட வெளிக்கள கணக்காய்வுப் பரிசோதனையின் போது மிரிஸ்லந்த ஹேனவத்த காணியில் கள்ளு வடித்தல் இடம்பெறுகின்ற மரங்களின்

அங்கீகாரத்தை வழங்குவதற்கு முன்னர் களப் பரிசோதனை மற்றும் ஏனைய தகவல்களின் மூலம்

கள்ளு வடிப்பதற்காக அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ள மரங்களின் எண்ணிக்கையின் பிரகாரம்

| | | | |
|---|---|---|---|
| | எண்ணிக்கை 500 இனை மிகைக்கவில்லை எனவும், எகொடவத்த காணியில் கள்ளு வடித்தல் இடம்பெறுகின்ற மரங்களின் எண்ணிக்கை 300 இனை மிகைக்கவில்லை என்பதுவும் அவதானிக்கப்பட்டது. | சமர்ப்பிக்கப்பட்டுள்ள தகவல்களின் சரியான தன்மையை உறுதிப்படுத்தல் வேண்டும். | போக்குவரத்து அனுமதிப்பத்திரம் வழங்கப்படுவதுடன் பல்வேறு நடைமுறைக் காரணங்களின் அடிப்படையில் அங்கீகரிக்கப்பட்ட மரங்களில் கள்ளு வடிப்பதனைக் போல அம்மரங்களில் கள்ளு வடிக்கப்படாமையும் இடம்பெறுகின்றது. எவ்வாறாயினும், கள்ளு வடிப்பதிலிருந்து கள்ளு வடிசாலைக்கு கிடைக்கின்ற வரை கலால் வரி திணைக்களத்தின் உத்தியோகத்தர்களால் மேற்பார்வை செய்யப்படுகின்றது. |
| (ii) | எகொடவத்த மாதம்பே ஆகிய நிலையங்களில் கள்ளு சேகரிக்கும் நிலையத்திற்காக CS 18/2018 ஆம் இலக்க உத்தரவுப் பத்திரம் வழங்கப்பட்டுள்ள போதிலும் அவ்வாறான கள்ளு சேகரிப்பு நிலையம் அக்காணியில் தோற்றுவிக்கப்பட்டிருக்கவில்லை. | - மேற்படி - | பதில்கள் வழங்கப்பட்டிருக்க வில்லை. |
| (iii) | 2018 சனவரி 29 ஆந் திகதி பிரதி கலால் வரி ஆணையாளரின் (வருமானம்) எல்பி/ஸ்பிரீட்/எக்மி/தும் ஆம் இலக்க கடிதத்தின் பிரகாரம் இந்த வழங்குனருக்கு 5000 தென்னை மரங்களின் கள்ளு அளவை நாளாந்தம் தும்மலசூரிய எக்மீ லங்கா வடிசாலைக்கு போக்குவரத்துச் செய்வதற்காக (2018 திசெம்பர் 31 ஆந் திகதி வரை) அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்தது. | - மேற்படி - | பதில்கள் வழங்கப்பட்டிருக்க வில்லை. |
| (iv) | மேற்கூறிய விடயங்களின் பிரகாரம் கள்ளு வடிப்பதற்காக அங்கீகரிக்கப்பட்ட மரங்களின் எண்ணிக்கை 4347 மாத்திரம் எனவும் அவற்றில் 3000 மரங்கள் மாத்திரம் எக்மீ வடிசாலைக்கு கள்ளு வடிப்பதற்காக உத்தரவுப் | உற்பத்தி இயலளவையும் உள்ளபடியாக வழங்கப்பட்ட மரங்களின் எண்ணிக்கையும் கவனத்திற்கு எடுத்து | பதில்கள் சமர்ப்பிக்கப்படவில்லை |

| | | | |
|---|---|---|---|
| | பத்திரம் வழங்கப்பட்டிருந்தது. உள்ளபடியாக 800 மரங்களுக்கு மேற்படாத அளவான கள்ளு வடிப்பதற்காகப் பயன்படுத்தப்பட்டிருந்ததுடன் 5000 மரங்களின் கள்ளை போக்குவரத்துச் செய்வதற்காக உத்தரவுப் பத்திரம் வழங்கப்பட்டிருந்தது என்பது அவதானிக்கப்பட்டது. அதற்கிணங்க 4000 இற்கு மேற்பட்ட எண்ணிக்கையான மரங்கள் கள்ளு வடிக்கப்படாது கள்ளு சேகரித்தல் மற்றும் போக்குவரத்து செய்வதற்காக அங்கீகரிக்கப்படுதல் தொடர்பாக கணக்காய்வில் சச்சரவுக்கு உட்பட்ட விடயமாகும். | போக்குவரத்து உத்தரவுப் பத்திரங்களை வழங்குவதற்கு வேலைத்திட்டத்தினை தயாரித்தல் வேண்டும். | |
| (ஈ) | ஏதாவது வகையான உத்தரவுப் பத்திரத்தினை வழங்கும் போது மதுவரி அறிவித்தல் இலக்கம் 902 அறிவித்தலின் iii ஆம் பட்டோலையில் குறிப்பிடப்பட்ட வழிகாட்டல் மற்றும் நிபந்தனைகள் அடைந்து கொள்ளப்பட்டன என்பது பற்றி விண்ணப்ப படிவத்திலும் பின்னிணைப்புக்களிலும் குறிப்பிட்ட விடயங்களை மதுவரி பரிசோதகர்களினால் பரீட்சிக்கப்பட்டு அவதானிப்புக்கள் உள்ளடக்கப்படுதல் வேண்டும். அதன் பின்னர் மதுவரி நிலையத்திலுள்ள நிலையத்திற்குப் பொறுப்பானவர் அல்லது மதுவரி அதிகாரியால் சிபார்சுகள் உள்ளடக்கப்பட வேண்டும். எனினும், ஜாஎல மதுவரி நிலையத்தில் உத்தரவுப் பத்திரத்திற்காக சிபார்சுகளை வழங்கும் போது அதற்கிணங்க நடவடிக்கைகள் எடுக்காத மதுவரி நிலையான பொறுப்பானவர்களாலேயே அனைத்து நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டு சிபார்சுகள் வழங்கப்பட்டிருந்த 15 சந்தர்ப்பங்களும் வடமேல் மாகாணத்தில் அவ்வாறான 2 சந்தர்ப்பங்களும் அவதானிக்கப்பட்டன. | மதுவரி அறிவித்தலில் குறிப்பிட்ட நிபந்தனைகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் மற்றும் உத்தரவுப் பத்திரங்களை வழங்கும் போது உள்ளகக் கட்டுப்பாட்டினை வலுப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | ஏனைய பரிசோதகர்களின் உள்ளக கடமைகள், நீதிமன்ற கடமைகள், உத்தரவுப் பத்திர நிலையத்தைப் பரீட்சித்தல் முதலிய நடவடிக்கைகளில் ஈடுபட்டிருக்கையில் நிலையப் பொறுப்பாளரினால் உத்தரவுப் பத்திரங்கள் சிபார்சு செய்யப்படுகின்றது. 120 அளவிலான உத்தரவுப் பத்திர நிலையங்கள் உள்ளதுடன் அவற்றில் 15 நிலையங்கள் நிலையப் பொறுப்பாளரால் மேற்கொள்ளப் படுகின்றது. |
| (உ) | உத்தரவுப் பத்திரங்களை புதுப்பிக்கும் போது தொழில்நுட்ப | கலால் வரி அறிவித்தல்களில் | பதில்கள் வழங்கப்படவில்லை. |

| | |
|---|---|
| குற்றங்கள் சம்பந்தமாக நிர்ணயிக்கப்பட்டுள்ள இணக்க கட்டணத்தை தீர்த்து வைத்தல் அத்தியாவசியமானதாக இருந்த போதிலும் தெரிவுக் கணக்காய்வு பரிசோதனைக்கு உட்பட்ட 3 கலால்வரி நிலையங்களில் அவ்வாறு நடவடிக்கை எடுக்கப்படாத 27 சந்தர்ப்பங்கள் காணப்பட்டமை அவதானிக்கப்பட்டது. | குறிப்பிட்ட நிபந்தனைகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 வருமான முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சிபார்சு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (அ) மீளாய்வாண்டிற்கான தொடக்க மதிப்பீட்டின் பிரகாரம் மதுவரி (மதுபானம்) வருமானம் ரூபா 125,000 மில்லியனாக இருந்த போதிலும், சமர்ப்பிக்கப்பட்டுள்ள வருமானக் கூற்றுக்களின் (ACA-1) பிரகாரம் திருத்திய மதிப்பீடு ரூபா 115,000 ஆகும். அவ்வாறு திருத்துவது தொடர்பாக நிதிக் கொள்கை திணைக்களத்திடமிருந்து பெற்றுக் கொள்ளப்பட்ட அங்கீகாரம் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | நிதிப்பிரமாணம் 128(1)அ வின் பிரகாரம் நடைமுறைச் சாத்தியமாக தயாரித்தல் மற்றும் 2015 யூலை 22 ஆந் திகதிய 01/2015 ஆம் இலக்க அரசாங்க நிதிக் கொள்கை சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகள் கடைப்பிடிக்கப்பட்டு வருமான நிருவாகத்தை மிகவும் செயல்திறனாக நிறைவேற்றுதல் வேண்டும். | இது தொடர்பாக கவனம் செலுத்தப்பட்டுள்ளதுடன் ஒரு குழுவை நியமித்து உரிய பகுப்பாய்வு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. பகுப்பாய்வு நடவடிக்கைகளை ஒரு மாதத்திற்குள் முடிவுறுத்தியதன் பின்னர் உரிய அறிக்கையை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிப்பேன். |
| (ஆ) மீளாய்வாண்டிற்கான தொடக்க மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம் ரூபா 125,000 ஆக இருந்ததுடன் திணைக்களத்தால் சேகரிக்கப்பட்ட வருமானம் ரூபா 113,850 ஆகும். அதாவது மதிப்பீடு செய்யப்பட்ட வருமானத்தில் 91 சதவீதமாகும். | - மேற்படி - | - மேற்படி - |
| (இ) 2016 ஆம் ஆண்டில் ரூபா 120.2 பில்லியனாக இருந்த | இக்காலப்பகுதியில் மதுபானங்கள் மீது | பதில் வழங்கப்படவில்லை. |

| | | | |
|---|---|---|---|
| | மதுவரி வருமானம் 2018 ஆம் ஆண்டளவில் ரூபா 113.8 பில்லியன் வரை 5.3 சதவீதத்தால் குறைவடைந்துள்ளது என்பது அவதானிக்கப்பட்டதுடன் இது சம்பந்தமாக தாக்கமளிக்கும் விடயங்கள் தொடர்பாக பகுப்பாய்வு செய்தல் மற்றும் அதற்காக எடுக்கக்கூடிய நடவடிக்கைகள் தொடர்பாக முகாமைத்துவத்தால் கவனம் செலுத்தப்பட்டுள்ளது என்பது அவதானிக்கப்படவில்லை. | மிகவும் உயர்வான வரி விதிக்கப்பட்டுள்ள நிலமையில் மதுவரி வருமானம் குறைவடைந்ததானது பாவனை குறைவடைந்ததன் காரணமாகவா அல்லாதுவிடின் வரி செலுத்தாது சட்டவிரோதமாக சந்தைக்கு மதுபானங்களை வழங்கக்கூடியதாக இருந்ததன் காரணமாகவா என்பது ஆழமாகப் பகுப்பாய்வு செய்து அரசாங்க வருமானத்தைப் பாதுகாப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | |
| (ஈ) | 2018 திசெம்பர் 31 ஆந் திகதியளவில் 5 கம்பனிகளிடமிருந்து 5 ஆண்டுகளை மிகைத்த நிலுவை வரிப் பணங்களின் மொத்த தொகை ரூபா 480 மில்லியனாக இருந்ததுடன் தாமதக் கட்டணம் ரூபா 1,543.78 மில்லியனாகும். அவ்வாறே 2 கம்பனிகள் தொடர்பாக வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டிருந்ததுடன் 3 கம்பனிகள் சம்பந்தமாக சட்டரீதியான நடவடிக்கைகள் எடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | நிதிப்பிரமாணம் 175(2) இன் பிரகாரம் வருமானங்களை சேகரிக்கும் உத்தியோகத்தர் நடவடிக்கை எடுக்க வேண்டியதுடன் அப்பொறுப்பை புறக்கணித்துள்ள உத்தியோகத்தர்கள் தொடர்பாக தாபன விதிக்கோவையின் XLVII ஆம் அத்தியாயத்தின் 8.1 மற்றும் 8.2 ஆம் பிரிவுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுப்பதற்குள்ள இயலுமையை ஆராய்ந்து பார்ப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | வயம்ப டிஸ்டிலரீஸ் கம்பனி, வயம்ப இஸ்பிரீட் களஞ்சியம், குளோப் பிலன்டர்ஸ் கம்பனி ஆகிய நிறுவனங்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுப்பதற்காக சட்டமா அதிபருக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. |
| (உ) | நிலுவை வருமானங்களைச் சேகரிப்பது சம்பந்தமாக நிதிப்பிரமாணம் 176(2),(3) இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் வருமானத்தை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | இணங்குகின்றேன். |
| (ஊ) | 2015 ஒக்தோபர் 22 ஆந் | நிதிப்பிரமாணம் 175(2) | வரையறுத்த |

| | | | |
|---|---|---|---|
| | திகதிய ஈசீ/சீ/04/2015 ஆம் இலக்க அறிவித்தல்களுக்கு இணங்க வரையறுக்கப்பட்ட ஹிங்குரான டிஸ்டிலரீஸ் கம்பனியிடமிருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 50.6 மில்லியன் நிலுவையான வரிப் பணம் நிலுவையான வருமானத்தில் உள்ளடக்கப்பட்டிருக்க வில்லை. அவ்வாறே PCAD/HGO/029/2015/CCR/ 1952 ஆம் இலக்க சுங்க வழக்கு பரிசோதனைக்கு இணங்க மதுவரித் திணைக்களத்தால் மேற்கொள்ளப்பட்ட பரிசோதனை தொடர்பாக மேற்கூறிய கம்பனியிடமிருந்து 2018 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு அறவிட வேண்டியிருந்த ரூபா 108.74 மில்லியன் நிலுவையான வரிப் பணத்தையும் உள்ளடக்கி ரூபா 158.36 மில்லியன் பெற வேண்டிய வரிப்பணம் நிலுவையான வருமானத்தின் கீழ் உள்ளடக்கப்பட்டிருக்க வில்லை. | இன் பிரகாரம் வருமானத்தை சேகரிக்கின்ற உத்தியோகத்தர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டியுள்ளதுடன் அப்பொறுப்பைச் செய்யத் தவறிய உத்தியோகத்தர்கள் இருந்தால் தாபன விதிக்கோவையின் XLVII ஆம் அத்தியாயத்தின் 8.1 மற்றும் 8.2 ஆம் பிரிவுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுப்பதற்கு உள்ள இயலுமையை ஆராய்ந்து பார்த்து நடவடிக்கை எடுக்க வேண்டும். | ஹிங்குரான டிஸ்டிலரீஸ் கம்பனியால் செலுத்த வேண்டியுள்ள ரூபா 50,620,739 பணம் இதுவரை செலுத்தப்படவில்லை. மேலும், இந்நிறுவனத்தால் செலுத்த வேண்டிய ரூபா 107,738,461 பணம் மாதாந்தம் ரூபா 15,391,208 வீதம் செலுத்தப்பட்டு வருவதுடன் 2019 யூலை 31 ஆந் திகதி செலுத்தி முடிவுறுத்துவதற்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. நிலுவை வருமானத்தின் கீழ் இறுதிக் கணக்குகளின் மூலம் சுட்டிக்காட்டுவதற்கு நடவடிக்கை எடுப்பேன். |
| (எ) | 1999 இன் 8 ஆம் இலக்க புகையிலை வரி அதிகாரச்சட்டத்தின் 2 ஆம் பிரிவின் பிரகாரம் இலங்கையில் உற்பத்தி செய்யப்படுகின்ற அனைத்து சிகரட்டுக்களுக்கும் சுருட்டுகளுக்கும், பீடிகளுக்குமாக மற்றும் குழாய்ப் புகையிலை ஒவ்வொரு கிலோவுக்குமாக வர்த்தமானியில் வெளியிடப்படுகின்ற ஒழுங்குபடுத்தலின் மூலம் அமைச்சினால் நிர்ணயிக்கப்படுகின்ற ஒவ்வொரு தொடர் அளவின் பிரகாரமான வரி அறவிடப்படுவதானது சிகரட்டிற்காக பயன்படுத்தப்படுகின்ற புகையிலைக்காக மாத்திரமாகும். இதற்கிணங்க | அதிகாரச்சட்டத்திற்கு இணங்க நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | பீடி மற்றும் சுருட்டு உற்பத்தியை நேரடி மேற்பார்வைக்கு உட்படுத்துதல் நடைமுறையில் சிக்கலானதாகும். அதன் காரணமாக உற்பத்தி செய்த அலகு வரியை அறவீடு செய்தல் நடைமுறையில் சிக்கலானதாக இருப்பதனால் அதற்கான மாற்று நடைமுறையாக பீடி மற்றும் சுருட்டு உற்பத்திக்குப் பயன்படுத்தப்படுகின்ற புகையிலை மூலப்பொருளின் அளவின் அடிப்படையில் வரியை அறவீடு செய்வதற்கு |

| | | |
|---|---|---|
| திணைக்களத்தினால் புகையிலை வரி அதிகாரச்சட்டத்திற்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை என்பது கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது. | | உத்தேசித்த புகையிலை வரி (பொது) கட்டளையை திருத்தம் செய்யும் போது உள்ளடக்கப்பட்டுள்ளது |

**2.2 செலவு முகாமைத்துவம்**

---------------------------------------

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சிபார்சு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (அ) நிதிப்பிரமாணம் இலக்கம் 50 இன் பிரகாரம் முறைப்படியாக மதிப்பீடு தயாரிக்கப்படாததன் காரணமாக ஒவ்வொரு செலவு விடயத்திற்குமாக குறைநிரப்பு மதிப்பீட்டின் மூலம் ரூபா 50 மில்லியன் தொகையும் 10 செலவு விடயங்களுக்காக நிதிப்பிரமாணம் 66 மாற்றல்களின் மூலம் ரூபா 84.5 மில்லியன் தொகையும் ஏற்பாடு வழங்கப்பட்டிருந்தது. | நிதிப்பிரமாணம் 50 இன் பிரகாரம் சரியாக செலவு மதிப்பீடு தயாரிக்கப்படுதல் வேண்டும். | கேள்விகளை வழங்குவதற்கு அங்கீகாரம் கிடைக்காமை, போதைப் பொருட்களை கட்டுப்படுத்தும் நிகழ்ச்சித் திட்டத்திற்கு இணைவாக திணைக்களத்தின் நோக்கெல்லையை விரிவுபடுத்துவதுடன் மேலதிக செயற்பாடுகளை நிறைவேற்ற வேண்டியிருந்தமை. நிதி ஏற்பாடு போதியளவில் இல்லாத சந்தர்ப்பங்களில் மேலதிக நிதி ஏற்பாட்டை பெறவேண்டி இருந்தமை. |
| (ஆ) 16 செலவு விடயங்களுக்காக ரூபா 639 மில்லியன் மொத்த தொகையான நிதிஏற்பாடு வழங்கப்பட்டிருந்தும் அச்செலவு விடயங்கள் தொடர்பாக வழங்கப்பட்ட நிதிஏற்பாடுகளில் ரூபா 252 மில்லியன் மொத்த தொகை மாத்திரம் பயன்படுத்தப்பட்டிருந்தது. அச்செலவு விடயங்களின் சேமிப்பு வழங்கப்பட்ட தேறிய நிதி ஏற்பாட்டில் 13 சதவீதத்திலிருந்து 100 சதவீதம் வரையான வீச்சுடைய அளவாக இருந்தது. | - மேற்படி - | திட்டமிடப்பட்ட பயிற்சி சந்தர்ப்பத்திற்காக உத்தியோகத்தர்கள் பங்குபற்ற முடியாதிருந்தமை, பெறுகை நடவடிக்கைகளுக்காக காலம் போதியதாக இல்லாதிருந்தமை, வவுச்சர்கள் நிர்ணயிக்கப்பட்ட வேளைக்கு கிடைக்காமை, கட்டிட மதிப்பீடுகளைத் தயாரிக்கும் போது தாமதங்கள் ஏற்பட்டமை, வாகனங்களை திருத்தம் செய்யாது கைதவிர்ப்புச் செய்தல் ஆகிய காரணங்கள் பெற்றுக்கொள்ளப்பட்ட நிதிஏற்பாடு குறைவாக பயன்படுத்துவதற்கு |

| | | | |
|---|---|---|---|
| | | | ஏற்பட்டிருந்தது. |
| (இ) | 3 செலவு விடயங்களுக்காக வழங்கப்பட்ட ரூபா 317.6 மில்லியன் தொகையான மொத்த தேறிய நிதி ஏற்பாட்டில் எதுவும் பயன்படுத்தப்படாது முழுமையாகச் சேகரிக்கப்பட்டிருந்தது. | - மேற்படி - | செயற்பாட்டு குத்தகை முறைமையின் கீழ் வாகனங்கள் பெற்றுக் கொள்ளப்படாமை, மதுபான போத்தல்களுக்காக எதிர்பார்க்கப்பட்ட பாதுகாப்பு ஸ்டிக்கருக்கு அங்கீகாரத்தினைப் பெற்றுக் கொள்வதற்கு முடியாமை மற்றும் வரி கணிப்பிற்காக உத்தேசிக்கப்பட்ட கணனி மென்பொருளைப் பயன்படுத்துவதற்கான பெறுகை நடைமுறைகளின் பின்னர் ஆயத்தப்படுத்தலுக்காக அங்கீகாரத்தினைப் பெற்றுக் கொள்ளாமை ஆகிய விடயங்களின் காரணமாக நிதிஏற்பாடு பயன்படுத்தப்பட்டிருக்க வில்லை. |

## 2.3 பொறுப்புக்கள் மற்றும் கடப்பாடுகளை ஏற்படுத்துதல்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சிபார்சு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| ரூபா 03 மில்லியன் கூட்டுமொத்தமான பொறுப்புக்கள் தொடர்பான தகவல்கள் உரிய படிவத்தில் காட்டப்பட்டிருக்கவில்லை. | அனைத்து பொறுப்புக்களும் கணக்குகளில் காட்டப்படல் வேண்டும். | சுட்டிக்காட்டப்பட்டவை சரியானது. இப்பொறுப்புக்கள் மீதிகளை சமர்ப்பிக்கப்பட்டுள்ள படிவத்தின் மூலம் காட்டுதலை தவிர்க்கப்பட்டிருந்ததுடன் எதிர்காலத்தில் இந்த நிலைமையை சரி செய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். |

## 2.4 வைப்பு மீதிகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சிபார்சு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| நிதிப் பிரமாணம் 571 இன் பிரகாரம் காலங் கடந்த அனைத்து வைப்புக்களையும் அரசாங்க வருமானத்திற்கு செலவுவைக்கப்பட வேண்டிய | நிதிப்பிரமாணம் 571 இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படுதல் வேண்டும். | சுட்டிக்காட்டப்பட்டவை சரியாகும். 2019 ஆம் ஆண்டின் மே மாதம் கணக்குகள் பொழிப்பின் மூலம் உரிய வைப்புக்களை |

| | | |
|---|---|---|
| போதிலும், 46 பல்வேறு வைப்புக்களுக்குரிய ரூபா 4.7 மில்லியன் கூட்டு மொத்த தொகை சம்பந்தமாக அதற்கிணங்க நடவடிக்கை எடுக்கப்படவில்லை என்பது அவதானிக்கப்பட்டது. | | கணக்கிற்கு செலவு வைப்பதற்கு நடவடிக்கை எடுத்துள்ளேன். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயற்பாடுகள் நிறைவேற்றப்படாமை

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சிபார்சு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (அ) மதுபான போத்தல்கள் மற்றும் மதுபான போத்தல் சார்ந்த உற்பத்திகளுக்கான பாதுகாப்பு ஸ்டிக்கர்களை வழங்குதல் மற்றும் ஸ்டிக்கர் முகாமைத்துவ முறைமைகளை வழங்குதல் மற்றும் நிறுவி பராமரித்துச் செல்வதற்கான செயற்திட்டத்தின் பெறுகை நடவடிக்கைகளுக்காக ரூபா 1.59 மில்லியன் பணம் 2017 ஆம் ஆண்டின் போது செலவு செய்யப்பட்டிருந்தது. அவ்வாறே 2018 ஆம் ஆண்டிற்காக ரூபா 250 மில்லியன் பணம் ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்தும் 2019 கணக்காய்வுத் திகதி வரையும் அச்செயற்திட்டத்தை அமுல்படுத்துவதற்கு முடியாதிருந்தது. | அரசாங்கத்தின் வருமானத்தை பாதுகாக்கும் வகையில் நிர்ணயிக்கப்பட்ட காலப்பகுதிக்குள் செயற்திட்டம் நிறைவேற்றப்படுதல் வேண்டும். | Fool Proof ஸ்டிக்கர் நிகழ்ச்சித்திட்டத்தை தற்பொழுது அமுல்படுத்துவதற்கு அண்மித்ததாக 95 சதவீதம் அளவான வேலைகள் முடிவடைந்துள்ளன. 2019 யூன் 01 ஆந் திகதி இறக்குமதி செய்யப்பட்ட விசேட மதுபான போத்தல்களுக்காக 2019 ஆகஸ்ட் 01 ஆந் திகதியிலிலிருந்து உள்நாட்டில் உற்பத்தி செய்த மதுபானப் போத்தல்களுக்காகவும் இந்த ஸ்டிக்கர்களை ஒட்டுவதற்கான அங்கீகாரத்தைப் பெற்றுக் கொள்வதற்காகவும் அதனை வர்த்தமானியில் வெளியிடுவதற்காகவும் அரசாங்க நிதிக் கொள்கை திணைக்களத்திற்கு தற்பொழுது ஒப்படைக்கப்பட்டுள்ளது. இதற்கிணங்க வர்த்தமானி அறிவித்தலின் மூலம் பிரசித்தப்படுத்தப்பட்டதன் பின்னர் உரிய திகதிகளில் இச்செயற்பாட்டை ஆரம்பிப்பதற்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது என்பதனை அறிவிக்கின்றேன். |
| (ஆ) வரியை கணிக்கும் நடைமுறையை | வரி கணிப்பு மற்றும் | தற்பொழுது காலாவதியாகியுள்ள |

| | | |
|---|---|---|
| சரிசெய்வதற்காக கணனி மென்பொருள் முறைமையை அமுல்படுத்துவதற்காக திணைக்களத்தினால் 2016 ஆம் ஆண்டிற்கான வரவு செலவுத் திட்ட நிதி ஏற்பாட்டின் மூலம் ரூபா 18.6 மில்லியன் தொகையும், 2017 ஆம் ஆண்டின் போது குறைநிரப்பு நிதிஏற்பாட்டின் மூலம் ரூபா 18.6 மில்லியன் தொகையும் 2018 ஆம் ஆண்டின் போது குறைநிரப்பு நிதி ஏற்பாட்டின் மூலம் ரூபா 50 மில்லியன் தொகையுமாக ரூபா 87.2 மில்லியன் மொத்த தொகையான நிதிஏற்பாடுகள் வழங்கப்பட்டிருந்தும் 2019 ஆம் ஆண்டிற்கான கணக்காய்வுத் திகதி வரையும் அச்செயற்திட்டத்தை அமுல்படுத்துவதற்கு முடியாதிருந்தது. | சேகரித்தலை ஆக்கபூர்வமாக்கு வதற்காக உத்தேசிக்கப்பட்ட இச்செயற்திட்டத்தை நிர்ணயிக்கப்பட்ட காலப்பகுதிக்குள் மேற்கொள்ளப் படுதல் வேண்டும். | மதுவரி வருமானத்தை முகாமைத்துவ முறைமையை தேவைப்பாட்டை காரணமாகக் கொண்டு இம்முறைமையினை நடைமுறைப்படுத்துவதற்காக தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றது. இதற்கு மத்தியில் பாதீட்டு நிதிஏற்பாட்டின் மூலம் பணம் ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்தும் பெறுகை நடைமுறைகள் இடைநடுவில் நிறுத்தியமை மற்றும் உலக வங்கிச் செயற்திட்டத்தின் கீழ் இச்செயற்திட்டத்தை அமுல்படுத்துவதற்கு எதிர்பார்த்தல் ஆகிய தொடக்க விடயங்களின் அடிப்படையில் உரிய நிதிஏற்பாட்டினை பயன்படுத்துவதற்கு சந்தர்ப்பம் உருவாகியிருக்கவில்லை. |

### 3.2 வருடாந்த செயலாற்றல் அறிக்கை

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| **கணக்காய்வு அவதானிப்புக்கள்** | **சிபார்சு** | **கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை** |
|---|---|---|
| (அ) 2017 ஆம் ஆண்டிற்கான செயலாற்றல் அறிக்கையில் உள்ளடக்கப்பட்ட பின்வரும் விடயங்கள் சம்பந்தமாக சமர்ப்பிக்கப்பட்டுள்ள தகவல்கள் பிழையானவை என்பது அவதானிக்கப்பட்டது. | | |
| (i) அறிக்கையின் 8.7 ஆம் அட்டவணை மற்றும் 8.8 ஆம் அட்டவணையின் பிரகாரம் 2017 ஆம் ஆண்டிற்கான தானிய மதுபான (பியர்) உற்பத்தி இருப்பு 48 மில்லியன் லீற்றர்களாக அறிக்கையிடப்பட்டிருந்த போதிலும், வருமானங்களின் | ஒவ்வொரு பிரிவுகளுக்கும் இடையே சிறந்த தொடர்புகளைப் பேணி சரியான அறிக்கையைச் சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் | வரியை கணிக்கும் கொள்கையானது 2018 நவம்பர் 09 ஆந் திகதிய அரசாங்க பாதீட்டு கொள்கையின் அடிப்படையில் மாற்றமடைந்ததன் காரணமாக இவ்வாறான நிலையை |

| | | | |
|---|---|---|---|
| | பகுப்பாய்வு அறிக்கையின் 8.20 ஆம் அட்டவணையின் மூலம் அது 70 மில்லியன் லீற்றர்களாக அறிக்கையிடப்பட்டிருந்தது. | வேண்டும். | உருவாகியுள்ளது. |
| (ii) | 2017 ஆம் ஆண்டில் பயன்படுத்தப்பட்ட மதுபானங்களின் அளவு தொடர்பாக "3A" அறிக்கையினை ஒப்பீடு செய்யும் போது வயின், வெளிநாட்டு மதுபானம், சாராயம், கள்ளு என்பன தொடர்பான உரிய தரவுகள் பிழையானவையாகக் காட்டப்பட்டிருந்தது. | - மேற்படி - | ஒவ்வொரு உத்தரவுப் பத்திரம் பெற்ற நிலையத்திலிருந்து கிடைக்கின்ற தரவுகளை ஏடுகளில் பதிதல், பொழிப்பாக்குதல் மற்றும் அதனை அடிப்படையாகக் கொண்டு அறிக்கைகள் சமர்ப்பிக்கின்ற சந்தர்ப்பங்களில் சில தவறுகள் இடம்பெறக் கூடிய வாய்ப்புக்கள் காணப்படுகின்றன. எதிர்காலத்தில் Public Sector Efficiency Enhancement Programme உலக வங்கி செயற்திட்டத்தின் கீழ் அறிமுகப்படுத்துவதற்கு நிர்ணயிக்கப்பட்ட Excise Revenue Management System முறைமைக்கு நுழையும் வழியானது அந்த தரவை வழங்கும் இயலுமையினை உத்தரவுப் பத்திரதாரர்களுக்கு வழங்குவதன் மூலம் அந்நிலைமையினை தவிர்க்கும் ஆற்றல் காணப்பட்டது. |
| (iii) | உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு வழிகளில் கிடைக்கின்ற எதனோல் பல்வேறு கைத்தொழில் உற்பத்திகளுக்காக நாட்டில் பயன்படுத்தப்படுவதுடன் எதனோல் இறக்குமதி செய்யப்பட்ட அளவு, பயன்படுத்திய கைத்தொழில் உற்பத்தி நிறுவனம் மற்றும் எவ்வாறான உற்பத்தி என்பது தொடர்பான தகவல்களை வருடாந்த செயலாற்றல் அறிக்கையில் உள்ளடக்குவதற்கு நடவடிக்கை | திணைக்களத்தின் செயலாற்றலுக்கு நேரடியாகத் தாக்கமளிக்கும் தகவல்கள் தொடர்பான உரிய அறிக்கையை சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | 2017 ஆம் ஆண்டிற்கான செயலாற்றல் அறிக்கையின் 8.7 ஆம் அத்தியாயத்தின் கைத்தொழில் உற்பத்திப் உத்தரவுப் பத்திரதாரர்களின் பெயர்கள் ஏடுகளில் உள்ளடக்கப்பட்டுள்ளன. கைத்தொழில் உற்பத்திக் பொருட்கள் பாரிய அளவில் உள்ளதனால் அந்த உற்பத்திகளை செயலாற்றல் அறிக்கையில் உள்ளடக்குதலினை நடைமுறையில் செய்ய முடியாது எனத் தெரிவிக்கின்றேன். |

எடுக்கப்படவில்லை.

### 3.3 பெறுகைகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சிபார்சு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (அ) அரசாங்க பெறுகை வழிகாட்டிக் கோவையின் 4.2.3 ஆம் வழிகாட்டியின் பிரகாரம் பெறுகைத் திட்டம் மாதாந்தம் அல்லது மூன்று மாதங்களுக்கு ஒரு தடைவ மேற்பார்வை மேற்கொண்டு அதிலுள்ள பலவீனங்களும் செயல்முன்னேற்றமும் தொடர்பாக ஆராய்ந்து பார்த்து தாமதங்கள் இருக்குமாயிருந்தால் அது சம்பந்தமாக காரணங்களை விசாரித்து அதற்கான பரிகாரம் மற்றும் நடவடிக்கைகள் எடுத்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பாக இருந்த போதிலும் அதற்கிணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்பது அவதானிக்கப்படவில்லை. | அரசாங்க பெறுகை வழிகாட்டிக் கோவையில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | 2018 ஆம் ஆண்டின் போது அரசாங்க பெறுகை வழிகாட்டிக் கோவையின் 4.2.3 ஆம் வழிகாட்டியின் பிரகாரம் பெறுகைத் திட்டம் மூன்று மாதங்களுக்கு ஒரு தடவை கண்காணிப்புச் செய்யப்பட்டு செய்யப்பட வேண்டிய திருத்தங்கள் செய்யப்பட்டிருக்காததுடன் 2019 ஆம் ஆண்டில் மூன்று மாதத்திற்கு ஒரு தடவையும் தேவை ஏற்படுகையில் அக்கண்காணிப்பு நடவடிக்கையை முறையாகச் செய்வதற்கும் அடிக்கடி தேவையான திருத்தங்களைச் செய்வதற்காகவும் முறையான வேலைத்திட்டம் ஈடுபடுத்தப்பட்டுள்ளது என தயவாகத் தெரிவித்துக் கொள்கின்றேன். |
| (ஆ) வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டம் பெறுகைத் திட்டம் வருடாந்த பாதீட்டுடன் இணங்கியிருக்காத 07 சந்தர்ப்பங்கள் கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது. அதற்கிணங்க பெறுகைத் திட்டத்தை தயாரிக்கும் போது எதிர்பார்க்கப்பட்ட குறிக்கோள்கள் நிறைவேற்றப்பட்டுள்ளது என்பது அவதானிக்கப்படவில்லை. | அரசாங்க பெறுகை வழிகாட்டிக் கோவையில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகள் மற்றும் சுற்றறிக்கை ஏற்பாடுகளை கவனத்தில் கொண்டு உரிய திட்டம் தயாரிக்கப்படுதல் வேண்டும். | 2019 ஆம் ஆண்டிற்கான வருடாந்த பாதீட்டுடன் இணங்கும் வகையில் பெறுகைத் திட்டத்தை தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என தயவாகத் தெரிவித்துக் கொள்கின்றேன். |

**3.4 நட்டங்களும் சேதங்களும்**

---

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சிபார்சு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| (அ) புத்தளம் மாவட்டத்தில் கள்ளுத் தவறணைகள் உரிய பிரதேச செயலகங்களின் மூலம் கேள்விகள் கோரப்பட்டு விற்பனை செய்வதற்கான பெறுகை பகிரங்கப்படுத்தப்பட்டிருந்தும் சில கள்ளுத் தவறணைகள் 2017 யூலை 01 ஆந் திகதியிலிருந்து 2018 யூன் 30 ஆந் திகதி வரை கேள்விகள் மூலம் விற்பனை செய்யப்பட்டிருக்கவில்லை. இதற்கு மேலதிகமாக அரசாங்கத்தின் உயர்ந்த மதிப்பீட்டிற்கு பொருத்தமாக கேள்விதாரர் கேள்வியைச் சமர்ப்பிக்காததன் காரணமாக பாலக்குடா இலக்கம் 03 கள்ளுத் தவறணை மற்றும் தளுவ கள்ளுத்தவறணை ஏலத்தில் விற்கப்பட்டிருக்கவில்லை. முன்வந்த கேள்விதாரருக்கு அக்கேள்வியை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்காததன் காரணமாக உரிய கள்ளுத் தவறணைகளின் இரண்டு கேள்விகளின் மூலம் அரசாங்கத்திற்கு ரூபா 3.5 மில்லியன் பணத்தை பெற்றுக்கொள்வதற்கு இருந்த வாய்ப்பு இழக்கப்பட்டிருந்தது என்பது அவதானிக்கப்பட்டது. | இடம்பெறக் கூடியதாக இருந்த நட்டத்தை குறைக்கும் வகையில் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | கள்ளுத் தவறணைகளை கேள்வி கோரி விற்றல் சம்பந்தமான அனைத்து நடவடிக்கைகளும் உரிய பிரசேத்திலுள்ள பிரதேச செயலாளர்களினாலேயே இடம்பெறுகின்றதுடன் கேள்விச் சபையின் தலைவரும் பிரதேச செயலாளராகும். அந்த கள்ளுத் தவறனைகளுக்கான சொத்துக்களை சான்றுப்படுத்தலும் பணத்தை அறவீடு செய்தலும், மீண்டும் கேள்வி கோருதலும் பிரதேச செயலாளரின் பொறுப்பாகும். வருடாந்த கேள்விக் கட்டணங்களை நிர்ணயித்தலும் கள்ளுத் தவறணைகளுக்காக கட்டிடங்களை அங்கீகரித்தலும், கள்ளுத் தவறணைகளுக்கு உத்தரவுப் பத்திரங்களை வழங்கியதன் பின்னர் கள்ளுத் தவறணைகளில் கள்ளு விற்பனை செய்தல் சம்பந்தமாக கண்காணித்தல் மாத்திரம் மதுவரித் திணைக்களத்தின் மூலம் இடம்பெறுகின்றது. |
| (ஆ) கிளிநொச்சி பனை மற்றும் தென்னை வளங்கள் அபிவிருத்தி கூட்டுறவு சங்கங்களில் வருடாந்தம் உற்பத்தி செய்யப்படுகின்ற கள்ளு போத்தல்களுக்காக மதுவரித் திணைக்களத்திற்கு நிர்ணயிக்கப்பட்ட வரிப் பணத்தை செலுத்துதல் வேண்டும். ஆனால் 2017 ஆம் ஆண்டு வரை உரிய | நிதிப்பிரமாணம் 175(2) இன் பிரகாரம் வருமானத்தை சேகரிக்கின்ற உத்தியோகத்தர் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியுள்ளதுடன் அப்பொறுப்புக்களை நிறைவேற்றத் | திணைக்கள ஏடுகளின் பிரகாரம் செலுத்த வேண்டிய நிலுவை சுட்டிக்காட்டப்படாததுடன் மேலும் பரீட்சித்ததன் பின்னர் இது தொடர்பாக அறிவிப்பேன். |

| | | | |
|---|---|---|---|
| | சங்கங்கள் 2,266,790 கள்ளு போத்தல்களை (625ml) உற்பத்தி செய்துள்ளன என்பது அறிவிக்கப்பட்டிருந்தும் 1,073,955 போத்தல்களுக்கு மாத்திரம் வரிப் பணம் செலுத்தப்பட்டுள்ளது என்பது அவதானிக்கப்பட்டது. அதற்கிணங்க 1,192,835 கள்ளு போத்தல்களுக்காக அறவிடப்பட வேண்டிய ரூபா 7,814,693 வரிப் பணம் செலுத்தப்பட்டுள்ளது என்பதற்கான சான்றுகள் சமர்ப்பிக்கப்படவில்லை. | தவறிய உத்தியோகத்தர்கள் இருந்தால் அவர்கள் சம்பந்தமாக தாபன விதிக் கோவையின் XLVII ஆம் அத்தியாயத்தின் 8.1 மற்றும் 8.2 ஆம் பிரிவுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். அவ்வாறே, திணைக்களம் இழந்த வருமானம் இருக்குமாயின் அதனை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | |
| (இ) | முன்னைய ஆண்டின் போது இடம்பெற்றுள்ள 7 வாகன விபத்துக்கள் சம்பந்தமாக ரூபா 1.8 மில்லியன் நட்டம் 2019 ஆம் ஆண்டிற்கான கணக்காய்வுத் திகதி வரை அறவீடு செய்வதற்கு அல்லது பதிவழிப்பதற்கு முறையான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்காததுடன் அது தொடர்பான நட்டங்கள் மற்றும் கைவிடுதல் தொடர்பான கூற்றில் எதுவித பதிவும் உள்ளடக்கப் பட்டிருக்கவில்லை. | நிதிப்பிரமாணம் 104 இன் பிரகாரம் நட்டத்தை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் அல்லது பதிவழிப்பதற்கு முறையான நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | சேதங்கள் நட்டங்கள் பதிவேட்டில் உள்ளடக்கப்பட்டு திறைசேரியின் அங்கீகாரத்தின் பேரில் கணக்குகளிலிருந்து பதிவழிப்பதற்கு அரசாங்க கணக்குகள் தொடர்பான தெரிவுக் குழுவினால் ஆலோசனை வழங்கப்பட்டிருந்ததனால் எதிர்காலத்தில் அவ்வாறு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது என தயவாகத் தெரிவிக்கின்றேன். |
| (ஈ) | ஹிங்குரான டிஸ்டிலரீஸ் கம்பனியால் 2012, 2013 மற்றும் 2014 ஆம் ஆண்டுகளின் போது சட்டவிரோதமாக இறக்குமதி செய்யப்பட்ட 218,600 லீற்றர் எத்தனோல் ஸ்பிரிட்களைப் பயன்படுத்தி உற்பத்தி செய்த 842,900 லீற்றர் மத்திய தர ஏற்றுக்கொள்ளப்பட்ட போதைப் பொருட்கள் மதுவரிக் கொடுப்பனவின்றி சந்தைகளுக்கு சமர்ப்பித்தல் சம்பந்தமாக அறவிடப்பட வேண்டிய மதுவரி அண்ணளவாக ரூபா 1,635 | நிதிப்பிரமாணம் 175(2) இன் பிரகாரம் வருமானங்களைச் சேகரிக்கின்ற உத்தியோகத்தர் நடவடிக்கை எடுக்க வேண்டியதுடன் அப்பொறுப்பை நிறைவேற்ற தவறியுள்ள உத்தியோகத்தர்கள் இருப்பார்களாயின் அவர்கள் சம்பந்தமாக தாபன விதிக் கோவையின் | மதுபானங்களை வழங்குதல் சார்ந்த நடைமுறைகள் சம்பந்தமாகவும் அதே போல மதுபானம் உற்பத்தி சார்ந்த தொழில்நுட்ப நடைமுறைகள் சம்பந்தமாகவும் அறிவும் அனுபவமும் உள்ள திணைக்களத்தின் சிரேஷ்ட உத்தியோகத்தர்களை உள்ளடக்கிய ஒரு குழுவின் மூலம் சுங்க பரிசோதனைகளின் போது |

| | | | |
|---|---|---|---|
| | மில்லியனாகும். இதற்காக நியமிக்கப்பட்ட குழுவால் பிழையான அடிப்படையின் பேரில் ஸ்பிரிட் ஏற்றுக்கொள்ளப்பட்ட போதை என கருத்தில் கொள்ளப்பட்டதன் காரணமாக அறவிடப்பட வேண்டிய மதுவரி ரூபா 589 மில்லியனாக அறிக்கையிடப்பட்டிருந்தது. இக்கணிப்பீட்டின் காரணமாக ரூபா 1,046 மில்லியன் அளவான பணம் அரசாங்கத்தினால் இழக்கப்பட்டுள்ளது என்ற சந்தேகத்தை கணக்காய்வின் போது தவிர்க்க முடியாதுள்ளது. | XLVII ஆம் அத்தியாயத்தின் 8.1 மற்றும் 8.2 ஆம் பிரிவுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | எதிர்த்தரப்பினரால் முன்வைத்த கூற்றுக்களின் அடிப்படையில் மாத்திரம் தோற்றுவித்து உச்ச அளவு நடைமுறைச் சாத்தியமாக உரிய கணிப்பீடு செய்தலை மேற்கொண்டு அரசாங்கத்திற்கு வரி வருமானத்தை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்பது அவதானிக்கப்பட்டுள்ளது. |
| (உ) | இந்த உற்பத்தி வளவில் திணைக்களத்தின் ஒரு அலுவலகத்தை ஸ்தாபித்த உத்தியோகத்தர்களை இணைத்துக்கொண்டு மேற்பார்வை நடவடிக்கைகள் ஒப்படைக்கப்பட்டிருந்தும் பல ஆண்டுகளாக இவ்வாறான சட்டவிரோத உற்பத்திகளை மேற்கொள்ளல் மற்றும் அவற்றை சந்தைக்கு வழங்குதல் வெளிப்படுத்தாமை சம்பந்தமாக முறையான பரிசோதனை மேற்கொண்டு அதற்குப் பொறுப்பான உத்தியோகத்தர்கள் சம்பந்தமாக பரீட்சித்துப் பார்ப்பதற்கு உரிய குழுவினால் அல்லது ஏனைய தரப்பினர்களால் முறையான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | - மேற்படி - | மதுவரி உத்தியோகத்தர்களுக்கு எதிராக குற்றங்களை சுமத்துவதற்கு போதியளவு சாட்சிகளை தேடிக் கண்டுபிடிக்க வில்லை எனத் தோன்றுகின்றது. இதில் மீண்டும் கவனம் செலுத்த வேண்டியதாவது எதனோல் இல்லாது விடின் உற்பத்தி செய்த மதுபானங்களின் அளவினை தேடிக் கண்டுபிடித்துக் கொள்ளாது ஏதாவது இரண்டு ஊழியர்களின் கூற்றை அடிப்படையாகக் கொண்டு சுங்க பரிசோதனையை போல மதுவரி பரிசோதனையும் மேற்கொள்ளப்பட்டுள்ளது எனவும் மதுவரித் திணைக்களத்தின் நிலைப்பாட்டை நிரந்தரமாக எதிர்த்தரப்பு கம்பனியின் சவால்களுக்கு உள்ளாகியிருந்தது என்பதுமாகும். |

## 3.5 முகாமைத்துவ பலவீனங்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சிபார்சு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (அ) மதுவரி நிலையம் மற்றும் விசேட செயற்பாட்டுப் பிரிவினை நிருவகிப்பதற்கான பிரமணாங்களுக்கு இணங்க உதவி மதுவரி ஆணையாளர் மற்றும் மதுவரி அதிகாரிகளால் தமது நிருவாகத்தின் கீழ் காணப்படுகின்ற மதுவரி நிலையங்களை காலாண்டு ரீதியாகவும் அரையாண்டு ரீதியாகவும் பரீட்சிக்க வேண்டிய போதிலும் ஒரு ஆண்டிற்கு பரீட்சிக்கின்ற தவணைகளின் எண்ணிக்கை 2 இற்கு மாத்திரம் மட்டுப்படுத்தப்பட்டதன் காரணமாக மேற்பார்வை நடவடிக்கை பலவீனமான மட்டத்தில் காணப்பட்டது. (உதாரணம்: ஜா எல, வடமேல் மாகாணம், திரையரங்குகள், ர.பி 9 உத்தரவுப் பத்திர நிலையங்கள்) | திணைக்களத்தின் கட்டளைகளுக்கு இணங்க உரிய மேற்பார்வை நடவடிக்கைகளை நிர்ணயிக்கப்பட்டவாறு மேற்கொள்வதன் மூலம் அரசாங்க வருமானத்தை பாதுகாப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | மதுவரி உத்தரவுப் பத்திரங்களைப் பெற்ற நிலையங்களைப் பரீட்சித்தல் ஆகக் குறைந்தது மாதாந்த அடிப்படையில் இடம்பெறவேண்டுமென நிர்ணயிக்கப்பட்டிருந்த போதிலும், சந்தேகத்திற்கு இடமான அல்லது அவ்வாறு செய்வது அவசியம் என நினைக்கின்ற சந்தர்ப்பத்தில் உத்தரவுப் பத்திரங்களை பெற்ற நிலையங்களைப் பரீட்சிப்பதற்கு சுங்க வரி உத்தியோகத்தர்களுக்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. எவ்வாறாயினும், கணக்காய்வின் போது வெளிப்படுத்தப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எதிர்காலத்தில் மிகவும் ஆக்கபூர்வமான மேற்பார்வையினை உத்தரவுப் பத்திரம் பெற்ற நிலையங்கள் சம்பந்தமாக பேணுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. |
| (ஆ) திணைக்களத்தினால் கடைசியாக 2016 திசெம்பர் 30 ஆந் திகதி 100 கிலோகிராம் பிரடெக்ஸ் கொள்வனவு செய்யப்பட்டிருந்ததுடன் 2018 திசெம்பர் 17 ஆந் திகதியளவில் களஞ்சியத்திலுள்ள இருப்புக்கள் முடிவடைந்திருந்தன. 2018 யூன் 05 ஆந் திகதி | நிர்ணயிக்கப்பட்ட காலப்பகுதிக்குள் நிறைவேற்றுவதற்கு முடியுமான வகையில் திட்டங்களை முறைப்படியாகத் தயாரித்து காலப்பகுதிக்குள் நிறைவேற்றுவதற்கு நடவடிக்கை எடுப்பதன் மூலம் அரசாங்க | தற்பொழுது கொள்வனவு செய்தல் இடம்பெற்றுள்ளது. |

| | | |
|---|---|---|
| களஞ்சிய பொறுப்பாளரால் களஞ்சியத்திலுள்ள இருப்புக்கள் 22.250 கிலோகிராம் எனவும் அது 5 மாதங்களுக்கு மாத்திரம் போதுமானதால் தேவையான இருப்பை வழங்குமாறு நிருவாக உத்தியோகத்தரினூடாக (வழங்கல்) பிரதான கணக்காளருக்கு வேண்டுகோள் விடுக்கப்பட்டிருந்தது. இதற்கான பெறுகை நடவடிக்கைகளை மேற்கொள்ளல் 2018 யூன் 14 ஆந் திகதியிலிருந்து ஆரம்பிக்கப்பட்டிருந்தும் 2019 ஏப்ரல் 09 ஆந் திகதி வரை உரிய பெறுகை நடவடிக்கைகள் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை. | வருமானத்திற்கு ஏற்படக்கூடிய பாதகமான தாக்கங்களை குறைப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | |

## 4. நிலைபேறான அபிவிருத்திக் குறிக்கோள்களை அடைந்து கொள்ளல்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சிபார்சு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| ஐக்கிய நாடுகள் அமைப்பின் நிலைபேறான அபிவிருத்தி நிகழ்ச்சி நிரல் 2030 இன் பிரகாரம் அடைந்து கொள்ள வேண்டிய இலக்குகளையும் குறிக்கோள்களையும் அடைந்து கொள்வது தொடர்பாக திணைக்களம் தெளிவுபடுத்தியிருக்காததுடன் இது சம்பந்தமாக நிதி ஏற்பாடு ஒதுக்கீடு செய்யப்பட்டு செயல் நடவடிக்கைத் திட்டத்தில் உள்ளடக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | குறிக்கோள்களை இனங்கண்டு இலக்குகளை அடைந்து கொள்வதற்கு தேவையான நிதி ஏற்பாட்டை ஒதுக்கீடு செய்து செயல் நடவடிக்கைத் திட்டத்தில் உள்ளடக்குவதற்கும் அமுல்படுத்துவதற்கும் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | ஐக்கிய நாடுகளின் நிறைபேறான அபிவிருத்தி இலக்குகள் தொடர்பாக திணைக்களம் உத்தியோகத்தர்களுக்கு தெளிவுபடுத்துவதற்கும் அந்த இலக்குகளை அடைந்து கொள்வதற்காக எதிர்காலத்தில் செயல் நடவடிக்கைத் திட்டத்தில் உள்ளடக்கி இலக்குகளை அடைந்து கொள்வதற்கும் நடவடிக்கை எடுப்பேன். |

**5.** **மனிதவள முகாமைத்துவம்**

---

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சிபார்சு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| (அ) திணைக்களத்தின் செயற்பணிக்கு நேரடியாகத் தாக்கம் ஏற்படுத்துகின்ற சிரேஷ்ட மற்றும் மூன்றாம் மட்டத்திலுள்ள 83 பதவிகள் 2013 மற்றும் 2016 ஆம் ஆண்டுகளிலிருந்து வெற்றிடமாகக் காணப்பட்டன. இது திணைக்களத்தின் எதிர்கால செயலாற்றலுக்கு பாதகமான தாக்கத்தை ஏற்படுத்தலாம் என அவதானிக்கப்பட்டது. | தேவைகளைக் கருத்தில் கொண்டு அங்கீகரித்த பதவியணியினர்களைச் சேர்த்துக் கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் அல்லது மேலதிக பதவிகளாக இருந்தால் திறைசேரியுடன் கலந்துரையாடி பொருத்தமான நடவடிக்கைகளை எடுப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | பதில்கள் சமர்ப்பிக்கப்பட்டிருக்க வில்லை. |
| (ஆ) திணைக்களத்தின் மதுவரி ஆணையாளராக செயற்பட்ட ஒரு உத்தியோகத்தர் வருமானக் கொள்கை ஆலோசகராக 2017 செப்தெம்பர் மாதம் நிதி மற்றும் ஊடக அமைச்சுக்கு இணைத்துக் கொள்ளப்பட்டிருந்ததுடன் அத்திகதியிலிருந்து 2018 திசெம்பர் 31 ஆந் திகதி வரையன காலத்திற்காக அனைத்து படிகளுடன் சம்பளமாக ரூபா 03 மில்லியன் பணம் திணைக்களத்தால் செலுத்தப்பட்டிருந்தது. ஆலோசகர் பதவியில் கடமையாற்றுவதற்குரிய செயலாற்றல் அறிக்கை கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | உரிய செயலாற்றல் அறிக்கையை கணக்காய்விற்குச் சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | பதில்கள் சமர்ப்பிக்கப்பட்டிருக்க வில்லை. |